பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 83 பிரமோதூத மாசி 06
1991 பெப்ரவரி 18 ஆம் திகதி திங்கட்கிழமை

## ஸ்ரீமாவோ தலைமையில் 21-ம் திகதி கொழும்பில் அரசியல் கட்சிகள் பேரணி

அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் பன்னிரண்டு அரசியல் கட்சிகள் இம்மாதம் 21-ம் திகதி பேரணி ஒன்றை நடாத்தவுள்ளன. கொழும்பு ஹவலொக் பார்க்கில் இப்பேரணி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மக்களது ஜனநாயக உரிமைகளை வென்றெடுத்தல், எதேச்சாதிகாரத்தின் பாதிப்பு பற்றி அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தேசிய பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் என்பன தொடர்பாகவே இப்பேரணி நடைபெறும் என இக்கட்சிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# மன்னார்-கொண்டச்சியில் படை அணி மீது தாக்குதல்

## 50 சிப்பாய்கள் பலி; பல ஆயுதங்கள் மீட்பு

மன்னாரில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். அவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை எட்டுமணியளவில் சிலாவத்தை முகாமில் இருந்து சுஜுவத்தை முகாமுக்கு கால்நடையாகச் சென்ற படையணி மீது கொண்டச்சிப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் தொடுத்தனர். இம்மோதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இதலத்திலேயே கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டன:

ஏ.கே. இலகு இயந்திர துப்பாக்கி - 3, அதற்குரிய ரவை கூடுகள்-3, வில் - 407, ரி-56-II-30, ரவைகூடுகள்-84, சி-81 - 10, ரவை கூடு - 32, ரி-56-I 3, 60 எம்.எம்.மோட்டார்-1, ஷெல்கள்-4, 203

— 4 ஆம் பக்கம் பார்க்க

### மணற்பிட்டி இராணுவ முகாம் மீதும் புலிகள் கடும் தாக்குதல்

மட்டக்களப்பு மணற்பிட்டி இராணுவ முகாம் மீது புலிகள் கடந்த வியாழனன்று கடும் தாக்குதலை நடாத்தினர்.

அதிகாலை 2.30 மணி முதல் மூன்று மணிநேரம் புலிகள் முகாம் மீது நடாத்திய தாக்குதலினால் முகாமிற்கு பலத்த சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின்போது புலிகள் தரப்பில் தயாளி (ஆரையம்பதி),மூவின் (சித்தாண்டி) ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனர்.(71)

### ஆனையிறவு இராணுவம் காவலரண் அமைக்க முயற்சி

நேற்று காலை 10 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து இயக்கச்சிப் பக்கமாக காவல் அரண் அமைக்க முயன்ற இராணுவத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை நடாத்தியுள்ளனர். சேதவிவரம் தெரியவில்லை. (71

### மட்டு. வாகரைப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. எனினும் நடவடிக்கைகுறித்த மேலதிகமாக எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

மட்டக்களப்பில் மீண்டும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க அதிக இராணுவம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

சாகரம்

### காடுகளில் தாக்குதல்

அம்பாறை மாவட்டம் சாகரம் காட்டுப்பகுதிக்கு சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

### கும்புறுமூலையில் இராணுவம் தமிழர் லொறிகளுக்கு தீயிட்டது

மட்டக்களப்பு கும்புறுமூலையில் இராணுவத்தினர் தமிழரது சில லொறிகளை தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர்.

அப்பகுதியில் மீண்டும் முகாமமைக்க இராணுவத்தினர் முற்பட்ட வேளையில் மேற்படி லொறிகளைத் தீ வைத்துக் கொளுத்தியதாக தெரியவருகிறது. (38)

### முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மிதிவெடிகள், பலர் சிக்குகின்றனர்

"கடந்த ஜுலை மாதம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் இடம் பெற்றவான் தாக்குதலில் எனது வலதுகண் பாதிக்கப்பட்டதுடன் வலது கையும் வழங்காமல் போயிற்று மேலும் இம்மாதம்12-ம் திகதி அதே இடத்தில் விடுபார்க்கச் சென்றபோது மிதிவெடியில் சிக்கி வலது காலையும் இழந்துள்ளேன்."

இவ்வாறு நான்கு பிள்ளைகளின் தந்தையான எஸ்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

### மன்னாரில் 5 புலிகள் வீரமரணம்

நேற்று மன்னாரில் நடைபெற்ற மோதலில் 5 புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். மேஜர் ராதாரவி (சி.சிவபாலன்) மன்னார், மேஜர் சூரி (ந. நகுலேஸ்வரன்) கிளிநொச்சி, கப்டன் தரைமணி (ச. தவராசா) வவுனியா, லெப். ஏகாம்பரம் (மு.மகாலிங்கம்),மன்னார், ஞானமுத்து (யோன்பற்றிக் அந்தோனி) ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (71)

### பூஸா, மகஸின், மகர சிறையில் 250 தமிழர்கள் தடுத்துவைப்பு

கடந்த இரு வாரங்களில் மட்டும் கொழும்பில் 75 க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைதாகியுள்ளதாக மனித உரிமைக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

இதேவேளை பூஸா, மகஸின் மகர போன்ற சிறைச்சாலைகளில் 250 க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள்தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (74)

### வவுனியா ஆஸ்பத்திரியில் மருந்து இன்றி 10பேர் மரணம்

வவுனியா ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு காரணமாகக் கடந்த மாதம் பத்துப் பேர் உயிரிழந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசு வவுனியா தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறியும், மருந்துகள் அனுப்பப்படாமை குறித்துக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (33)

### மன்னாரில் பஸ் சேவை எரிபொருள் இன்றி நிறுத்தம்

மன்னார் தீவில் இ. போ. ச. பஸ் சேவை முற்றாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இங்கு மாட்டு வண்டிகள் சேவையாற்றுகின்றன.

தலைமன்னார்-மன்னார் பஸ் சேவைக்கு சில நாட்களாக படையினர் எரிபொருள் வழங்கிவந்தனர். அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது.

பேசாலை-மன்னார் மாட்டு வண்டிக் கட்டணமாக 600 ரூபா அறவிடப்படுகிறது. (33)

### தோட்டத் தொழிலாளர்களும் காணாமல் போகிறார்களாம்

மலையகத்தில் தோட்ட தொழிலாளர்கள் சீருடை அணிந்தவர்களால் கடத்தப்பட்டு, காணாமற் போவதாக விவசாயக் கிரா

— 04 ஆம் பக்கம் பார்க்க

### போலி 'லாவோஜி' தேயிலை பொதுமக்களுக்கு எச்சரிக்கை

போலி லிப்டன் லாவோஜி தேயிலை குடா நாட்டில் பரவலாக விற்பனையாவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தொடரும் மீன்வலைத் திருட்டு

காரைநகர் கோவளம் - தாழையடி பகுதியிலான கடல்களில் மீன்பிடித் தொழில் செய்வோரின் படுப்புவலைகள் தொடர்ச்சியாகத் திருடப்பட்டும், வெட்டப்பட்டும் வருகின்றன. ஆழ்கடல் மீன்பிடி பாதிப்படைந்த இவ்வேளையில் கரைக்கடலில் மீன்பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இவ்வலைகள் திருடப்படுவதால் தொழிலாளர்கள் பாதிப்படைகின்றனர்.

(ப-35)

# ரூபா 25 லட்சம் கப்பம் கேட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியின் சகோதரருக்கும் றிமாண்ட்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த எம். பி ஒருவரின் சகோதரரான ஜனாப் பஸீர், மேற்படி காங்கிரஸின் முன்னாள் பொருளாளர் ஜனாப் முபாறூக் ஆகியோரும் மற்றும் இரு தமிழ் இளைஞர்களும் கப்பம் கோரியதான குற்றச் சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

25 இலட்சம் ரூபா கப்பம் கோரியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட பிரஸ்தாப நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. கே. ரி. சித்திரசிறி உத்தரவிட்டார்.

மேற்படி புகார் தொடர்பான பொலிசாரின் விசாரணைகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் இதன் பின்னணி பற்றிய முழுமையான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

## சைவசமயப் பரீட்சை

சைவபரிபாலன சபை நடாத்தும் ஆண்டு 11க்குரிய சைவசமய பாடப்பரீட்சை மார்ச்மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விபரங்களை இம்மாத இறுதிக்குள் அனுப்புமாறு அதிபர்களைப் பரீட்சைச் செயலாளர் கேட்டுள்ளார்.

## கண் சிகிச்சை கிளினிக்

யாழ் போதனா வைத்தியசாலையில் கண் சிகிச்சை கிளினிக் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் வழமைபோல் நடைபெறுமென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ப 11)


பண்டத்தரிப்பு பரிஷ் தொகுதி

### தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் பண்டத்தரிப்பு

### பதவி வெற்றிடங்கள்

1. லிகிதர்:

தகைமைகள்:- கூ. வே. ஆ. குழுவின் 14ஆவது சம்பளத்திட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது க. பொ. த (சாதாரணம்) கணிதம், தமிழ் உட்பட 5 திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி. (ஒரே தடவையில்)

சம்பள அளவுத்திட்டம்: 302 / 13க்கு அமைவான புதிய சம்பளத்திட்டம்.

2. கிளைமுகாமையாளர் தரம்-3

தகைமைகள்:- கூ. வே. ஆ. குழு 14 ஆவது சம்பளத்திட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது க. பொ. த. (சாதாரணம்) கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி. (ஒரே தடவையில்)

சம்பள அளவுத்திட்டம்: 302/13 அமைவான புதிய சம்பளத் திட்டம்.

3. விற்பனை உதவியாளர்:

தகைமைகள்:- கூ. வே. ஆ. குழு கனிஷ்ட தராதரம் அல்லது கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் 3 வருட அனுபவத்துடன் 8ஆம் வகுப்பில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- 308 / 15க்கு அமைவான புதிய சம்பளத்திட்டம்.

குறிப்பு:- சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் 27-02-1991ஆம் திகதிக்கு முன்னதாக 'தலைவர் பண்டத்தரிப்புபரிஷ், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்சங்கம், பண்டத்தரிப்பு' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்
பண்டத்தரிப்புப் பரிஷ்
தெங்கு பனம் பொ. உ. வி. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

02097



### சிறு விளம்பரம்

#### தவறிவிட்டது

காசிநாதன்-மாதர்க்கரசி. காசிநாதன்-சாந்தினி ஆகியோருடைய நிவாரணப் பங்கீட்டு அட்டைகள் மூன்று திருநெல்வேலி தேங்காய்ச் சந்தையில் தவறி விட்டன மிகவும் கஷ்டப்பட்ட இக் குடும்பங்களின் அட்டையைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். கா. ஹரிச்சுசந்திரா.

02100

#### விற்பனைக்கு

எண்ணெய்க் குளியலுக்கு இயற்கை வளம்கொண்டு தயாரித்த ஒலிவ்ஸ்நானப் பவுடர் பக்கெற் ஒன்றின் விலை ரூ. 1 50 மட்டுமே மில்க்வைற் - யாழ்ப்பாணம்

02096

#### பரீட்சை நூல்

யாழ் பல்கலைக்கழக லிகிதர்/தொழில் நுட்ப வியலாளர் பரீட்சைக்குரிய பொது உளச் சார்பு (IQ) நூல் எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. விலை: 50/-. ஆக்கியோன் க குணராசா, எம். ஏ.

02086


### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 16 - 10 - 1930

ஆண்டவன் அடியில்: 03 - 03 - 1987

திதி; 18 - 02 - 1991

**திருமதி சரஸ்வதி பரமலிங்கம்**

தியாகத்தின் திருவுருவே
எங்களின் உயிரான - தாயே
நீங்கள் எமைப்பிரிந்து
நான்காண்டுகள் போயினவோ
கருணையெனும் செயலினால்
காத்திடுவாய் எங்களையே

சரஸ்வதி வாசா,
V. M. வீதி,
பருத்தித்துறை.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

02C77

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

**திரு. ஆறுமுகம் கந்தசாமி**

தோற்றம்: 21 - 04 - 1923 மறைவு: 20 - 01 - 1991

வல்வெட்டித்துறை நெடியகாட்டைச்சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபர் ஆறுமுகம் கந்தசாமி என்பவர் 20-01-91இல் ஏற்பட்ட விமானத்தாக்குதலில் அகால மரணமானார்.

இவரது மரண அறிவித்தல் சூழ்நிலை சீராக இல்லாமையால் அறிவிக்க முடியவில்லை. இவரது அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 19. 2. 91 செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்று ஊறணிச்சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும். நண்பகல் வீட்டுக் கிரியைகள் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மு. இராசவேல்

இங்ஙனம்
குடும்பத்தினர்

02092

# தமிழர்க்கான அதிகாரப் பரவலாக்கலுக்கு இதுவே சரியான நேரம் என்கிறார் இந்தியத்தூதர் ஜா!

''இலங்கையின் தேசிய விவகாரங்களில் தமிழர்கள் அதிகளவில் பங்கேற்கும் வகையில் செய்வதற்கு இதுவே சரியான நேரம்'' என்று இலங்கைக்கான இந்தியத்தூதர் திரு. நாகேந்திரநாத் ஜா கூறியுள்ளார்.

''தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்பட்டு விடவில்லை என்பதனை அவர்களுக்கு உணர்த்திட ஒட்டு மொத்ததிட்டம் ஒன்றை இலங்கை அரசு கொண்டுவர வேண்டும். இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் ஓர் முதல் நடவடிக்கையாக வட, கிழக்கு மாகாணங்களுக்கு ஓர் இடைக் கால சபையை ஏற்படுத்த வேண்டும்'' என்றும் அவர் கொழும்பு நாளேடு ஒன்றிற்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை சிரமைப்பு

''பாடசாலையின்அபிவிருத்தியிலும் மாணவர் கல்வி வளர்ச்சியிலும் ஆசிரியர்—பெற்றோர்இணைவு அதிமுக்கியமானதாகும்—சகலவைற்றிற்கும் கல்வி இலாக்காவையே எதிர்பார்த்துக் கொண்டிராமல்அபிவிருத்தியில்முனைப்புக்கொள்ள இத்தகைய இணைவு உதவும்''என்று மட்டுவில் தெற்கு இலுப்பையடிஅமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் எஸ். துரைரத்தினம் அபிவிருத்தி யற்றிய சிறப்பு நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

பாடசாலை சிரமைப்புக்காக 1000 ரூபா வைத் தன் சொந்தப் பணத்தில்செலுத்தி அவர் நிதியை ஆரம்பித்து வைத்தார். பெற்றோரும் தாராளமனதுடன் நிதியளித்தனர்.

## வண்ணை பெருமாள் கோவிலில் சாந்தி ஹோமம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், பின்போடப்பட்ட கடந்த ஆண்டின் மஹோற்சவத்தை இவ்வாண்டு மார்ச் மாதத்தில் நடாத்தவுள்ளது. இம்மாதம் 21, 22 ஆம் தேதி வியாழன், வெள்ளி முறையே சாந்தி ஹோமமும், திசாஹோமமும் நடைபெறவுள்ளன. தேவஸ்தான மஹோற்சவம் மார்ச் 4 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

## 'வரலாற்றை உருவாக்கிய உன்னத தலைவர் பிரபாகரனே'

''இன்று நாம் இரண்டு தலைவர்களைச் சந்தித்திருக்கிறோம். ஒன்று வரலாறு உருவாக்கிய தலைவர்கள். அவர்கள் வாக்குப் பெறுவதற்காக தமிழனை விற்றுப்பிழைத்தார்கள். மற்றது வரலாற்றை உருவாக்கிய தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன். அந்த வரலாற்றை உருவாக்கிய தலைவரின் வழிநடத்தலை மாணவர்கள் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகரான திரு. செங்கதிர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற பிரசாரக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. க சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. செங்கதிர் தொடர்ந்து பேசுகையில் பாடசாலை மட்டும் தான் புத்திஜீவிகளை உருவாக்கும் இடமல்ல போராட்டக் களமும் புத்திஜீவிகளை உருவாக்கும் என்றார். (ப-5)

## ரூபா 15 கோடி ஜவுளி மோசடி

ஆடை ஏற்றுமதியின் பேரால் பதினைந்து கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தைத்த ஆடைகள் தயாரிப்பாளர் ஒருவரே இவ்விதம் மோசடியில் ஈடுபட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்றுமதி ஆடைகள் தயாரிப்பிற்கென இறக்குமதி செய்யப்பட்ட துணிகள் அங்கீகாரமின்றி விற்பனை செய்யப்பட்டு மோசடி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சீனப் பெண்களின் 'ஆசை'

'மனம் விரிந்தால் பிரபஞ்சம் குவிந்தால் மூக்தி' என்பது பழமொழி. மனதை அடக்க முடியாமல் ஆசைகளிலெல்லாம் திரிந்து அலைகின்றபோது இவ்வுலகமே ஒருவனுக்குக் கிடைத்தாலும் அவன் ஆசை அடங்குவதில்லை என்று பொருளாகிறது. இந்த வகையில் பல பெண்களுக்கு ஓர் விநோத 'ஆசை' வலுப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த பிறவியில் ஆணாகப் பிறக்க வேண்டுமென்பதே இவ்வாசையாகும் அப்படிப் பிறக்க வேண்டுமெனப் பிரார்த்தனை செய்யச் சீனாவில் பெண்கள் 'நிங்போ' என்ற பெயரில் ஆலயம் ஒன்றையே கட்டியுள்ளனர். சீனப் பெண்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை உண்டு. ஆணாகப் பிறந்தால் சுதந்திரங்களை அனுபவிக்கலாம் என்கிறார்கள் அவர்கள்.

## பங்குத்தந்தையர் இடமாற்றம்

பாஷையூர் பங்கில், கடந்த ஆறுவருட காலமாக பங்குத் தந்தையாக பணியாற்றிய வண. பிதா பிரான்சிஸ் அடிகளாரும், உதவிப் பங்குத் தந்தை எட்மன் அடிகளாரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (16)

## புரியாத நிலையா?

இலங்கை மத்திய வங்கிக்கு வாழ்க்கைச் செலவு உயர்வு இன்னமும் புலப்படாத ஒன்றாக இருக்கிறதாம்.

அதன் மாதாந்த வாழ்க்கைச் செலவு சுட்டெண் கடந்த வருடம் டிசம்பரில் 1095 என்றும் இவ்வருடம் ஜனவரியில் 1082 என்றும் தெரிவிக்கிறது.

வங்கி ஊழியர்கள் என்று மாத்திரமில்லாமல் சமூகத்தின் பலதரப்பட்ட மக்களும் வாழ்க்கைச் செலவு உயர்வினால் திண்டாடுவது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. (16)

வளைகுடாப்போர் மூலவர்:

## சதா பேசப்படும் சதாம் ஹுசேன்

இன்று வளைகுடாப் போர்பற்றி வாய் விட்டுப் பேசாதார் எவரும் இல்லை. அந்த அளவிற்கு அது ஏதோ ஒருவகையில் அனைவரையும் பாதித்துள்ளது. இதற்கு மூலவர் சதாம் ஹுசேன் என்பது ஒரு சாரார் கருத்து. அவை அலசி ஆராயப்பட வேண்டியவை. ஆனால் சதா எல்லோராலும் பேசப்படும் இந்தச் சதாம் பற்றியும் இந்த வளைகுடா யுத்தத்தினூடாகப் பார்க்கமுடியும்.

1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஈராக் கிராமத்தில் ஒன்றான அல்ஊஜாவில் பிறந்தவர் சதாம்ஹுசேன். பிறந்தவுடன் தந்தையை இழந்தவர், கர்ணனைப்போல் தவறான வழியில் பிறந்த குழந்தை என அவமதிக்கப்பட்டவர். பெற்ற தாய் சுபா துல்லாவாலும் கைவிடப்பட்டவர். எட்டு வயதிலேயே அநாதையாய் ஒதுக்கப்பட்ட சதாம் தாய் மாமன் கைரதுல்லாவால் வளர்க்கப்பட்டார். இவர் பாடசாலைப் பெயர் சதாம் தக்ரிதி.

தன் தாய் மாமனுக்கு நன்றிக்கடனாக அவரை எதிர்த்த கொம்யூனிஸ்ட் வேட்பாளரான தன் ஆசிரியரை வகுப்பிலேயே சுட்டுக் கொன்றார். இதன்பின் பக்தாத் வந்து படிக்கத் தொடங்கினார். பல்கலைக்கழகச் சட்டப்பள்ளியில் சேர்ந்தார். படிப்பைவிட அரசியல் அவரை ஈர்த்தது. அரபு மக்களுக்காகப் போராடும் பாத்கட்சி அவரைக் கவர்ந்தது. தன் துணிச்சல், வீரம், தன்னம்பிக்கைகளால் பாத் கட்சியின் மூத்த தலைவர்கள் கவனத்தைத் தன்பக்கம் திருப்பினார்.

1959இல் இராணுவப் புரட்சியால் மன்னர் ஃபைசல் வீழ்த்தப்பட்டார். தளபதி அப்துல் கரீம் க்வாசம் ஆட்சியைப் பிடித்தார். ஆனால் பாத் கட்சி, க்வாசத்தைக் கொல்லத் தீர்மானித்தது. பொறுப்பை இரகசியப் படையிடம் ஒப்படைத்த பாத்கட்சி காவலாகச் சதாமை அனுப்பியது ஆனால் சதாம் க்வாசத்தைத் தானே போய்ச் சுட்டார். க்வாசம் உயிர்தப்பி விட்டார். சதாமுக்கோ காலில் குண்டுபாய, தப்பி ஓடிப்போய், குண்டைத் தானே பேனாக்கத்தியால் கீறி எடுத்தார். கழுதையில் ஏறிப் பாலைவனத்துக்குள் ஓடித் தப்பினார்.

க்வாசிமைச் சுட்டதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டார். தண்டனைக்குத் தப்புவதற்காக மூன்றாண்டுகளை எகிப்திலும் சிரியாவிலும் கழித்தார்.

1968இல் ஈராக் அதிபராகப் பொறுப்பேற்ற சதாம்; ஈராக் படையை இரும்பு இராணுவமாக்கினார். ரஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்ட அணு. ரசாயனக்குண்டுகள் தயாரிப்பிற்கான அஸ்திபாரங்களிட்டார்.

ஈரான்—ஈராக் யுத்தம் நடந்தபோது குவைத்தின் சில செயல்களால் தான் பாதிக்கப்பட்டதாக ஈராக் குற்றம் சாட்டியது. குவைத் தன் கோரிக்கைக்கு இணங்க மறுத்தமையால் கடந்த ஆண்டு ஓகஸ்ற் 2 ஆம்திகதி சதாம் குவைத்தை ஆக்கிரமித்தார். குவைத் மன்னர் சவுதிக்குத் தப்பி ஓடினார்.

மேற்குலக வல்லரசுகள் ஈராக் குவைத்தை விட்டு வெளியேற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கும் காஸாவையும், மேற்குப்பகுதிகளையும் விடுவித்தால்தான் குவைத்தை விட்டு விலகுவதாக சதாம் கூறுகிறார்.

வளைகுடா யுத்தத்தில் ஈராக் வளைந்து கொடா நாடாகவே நிமிர்ந்து நிற்கிறது.

—இந்துமதி

நன்றி:-குமுதம்

# அதிக மாணவர்களை அனுமதிப்பதற்கு

# பல்கலைக்கழகத்திற்கு நிதி ஒதுக்கவில்லை

பல்கலைக்கழகங்களுக்கு கூடுதலான நிதி ஒதுக்காத வரை மேலதிக மாணவர்களை அனுமதிக்கமுடியாது என பல்கலைக்கழக பீடாதிபதிகள் உயர்கல்வி அமைச்சுக்கு தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டு 9350 மாணவர்களை அனுமதிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அரசின் தீர்மானப்படி இம் மாணவர்களை அனுமதிப்பதனால் மேலதிக நிதியாக பத்துக்கோடி ரூபா தேவைப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் மாணவர்களின் தொகை அதிகரிக்கப்பட்ட போதிலும் அவர்களின் தேவைகளைக் கவனிப்பதற்கு நிதி அதிகரிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியில்லாமையால் இட நெருக்கடி, தளபாடம் போதாமை போன்ற பிரச்சினைகள் தோன்றியிருப்பதாகவும் அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றால் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்து, மாணவர் தெரிவுப் பட்டியல் ஏப்ரல் மாதமே வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

## தனிநாடு கோரிக்கை ஏன்?
## அதாவுட எம். பி, விளக்கம்

சிங்கள அரசாங்கங்கள் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. அவர்களைப் புறக்கணித்து இனப்பாகுபாடு காட்டுகின்றன.

இவ்வாறு கேகாலை மாவட்ட ல. ச. ச. கட்சி எம். பியான அதாவுட செனிவரட்னா இரத்தினபுரியில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தமிழரின் பிரச்சினை தீர்க்கப்படாததாலேயே அவர்கள் தமது பிரச்சினைத் தீர்வுக்கு தனிநாடு ஒன்று தேவை எனச் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

இராணுவ பலத்தைக் கொண்டு இவர்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்க முடியாது இவ்வாறு அவர் கூறினார். (33)

## இனப்பிரச்சினைத்தீர்வுக்கு
## கூட்டணி தனியான யோசனை

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியிடம் தனியாக யோசனை சமர்ப்பிக்கவுள்ளதாக கூட்டணி எம். பியான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பில் மாற்றங்கள், வடக்கு கிழக்கில் இடம்பெறும் குடியேற்றங்கள் என்பன தொடர்பாக இந்த யோசனை அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையை தமிழ், முஸ்லிம் கட்சிகளின் கூட்டு யோசனைகளில் இணைக்குமாறும் கூட்டணி வட்டாரங்கள் கேட்டுள்ளதாக தெரிய வருகிறது. (33)

## தலைவரின் உத்தரவை மீறும்
## செஞ்சிலுவைத் தொண்டர்கள்

யாழ் போதனா வைத்திய சாலையில் நோயாளிகளைப் பார்வையிட ஒரு பாஸில் இருவரை அனுமதிக்குமாறு யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் கடந்த சனிக்கிழமை முதல் உத்தரவிட்டும், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் ஒருவரையே உள்ளே செல்ல அனுமதிக்கின்றனர்.

இதனால் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏன் ஒருவரையே பாஸில் விடுகிறீர்கள் இருவரை விடலாமே என எமது நிருபர் செஞ்சிலுவைத் தொண்டரிடம் கேட்டபோது, எங்களுக்கு மேலிடத்திலிருந்து இது குறித்து எதுவித உத்தரவும் வரவில்லை எனத் தெரிவித்தனராம். (ப11)

## 23 பொதுமக்கள்
## வவுனியாவில் பலி

கடந்த வாரம் வவுனியாவில் ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் இருபத்து மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் லண்டனில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழுநோயாளிகளுக்கும்
## சிகிச்சை அளிக்க முடியாதாம்

வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் சம்பவங்களால் அங்குள்ள தொழுநோயாளிகளை அடையாளம் காண முடியாதிருப்பதுடன் அவர்களுக்கு சிகிச்சையளிக்கவும் முடியாதிருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்ளர் ஜோ, பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பன்னீராயிரம் தொழுநோயாளர்கள் இருப்பதாகவும், 1995இல் இதனை ஆயிரமாக குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (33)

## பிக்கு மாணவன் கைது

விகாரை ஒன்றில் இடம் பெற்ற கொள்ளை தொடர்பாக களனி பல்கலைக்கழக பிக்கு மாணவன் ஒருவனை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த வருடம் நவம்பர் மாதம் இக் கொள்ளை இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (33)

மன்னார்—

ரீவோல்வர்-1, 40 எம். எம். ஷெல், ரிமோட் கிரனைட்-1, கைக்குண்டுகள்-17, ஐ. எம். ரவைகள்-9,000, தொலை தொடர்பு சாதனங்கள் - 2, கவச உடை-4.

இம்மோதலில் 5விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர். (71, ப-14)

சாகரம்...

நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலிழந்தார் (71)

மட்டு. வாகரைப்...

குவிக்கப்படுவதாக சில தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியானது தெரிந்ததே.

முல்லைத்தீவு...

யோகேந்திரராஜா தனது சோகக்கதையை கண்ணீர் மல்க முரசொலிக்குத் தெரிவித்தார்

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் ராணுவத்தினரால் வைக்கப்பட்ட மிதிவெடிகள் ஏராளம். இவை இருக்குமிடம் தெரியாமல் சைக்கிளில் செல்வோரும் பாதசாரிகளும் தினமும் அகப்பட்டு அவயவங்களை இழக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (ப-11)

## 'ஈழநாதம்' பத்திரிகை
## முதலாண்டு நிறைவுவிழா

தமிழீழத் தேசிய தினசரிகளுள் ஒன்றான ஈழநாதம் நாளை பத்தொன்பதாம்திகதி செவ்வாய்க்கிழமை தனது ஓராண்டை நிறைவு செய்கிறது. அன்றையதினம் பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் க. சிவராமலிங்கம் தலைமையில் அதன் நிறைவுவிழா நடைபெறவுள்ளது.

## ஈராக் விதிப்பதுநிபந்தனையல்ல
## அரபுலகின் நீண்டகாலபிரச்சினை

குவைத்தில் இருந்து ஈராக் வெளியேற நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை. அரபுலகின் நீண்ட காலப்பிரச்சினை குறித்தே ஈராக் குறிப்பிட்டுள்ளது என ஐ. நா. வுக்கான ஈராக் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். இதை அமெரிக்கா அவசரப்பட்டே நிராகரித்து விட்டது கவலை தருவதாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

ஈராக்கில் நடைபெறும் குண்டு வீச்சினாலும் அப்பகுதியில் தொடர்ந்து எரியும் எண்ணெய்க் கிணறுகளினாலும் மேற்கு ஈரானில் கறுப்பு மழை பெய்து வருவதாகத் தெரிவிக்கடபட்டது.

இதனிடையே ஈராக் தனது எல்லைப் பகுதியில் புதிதாக அவதானிப்புக் காவலரண்களை அமைத்து வருகின்றது இது தரைத் தாக்குதலின் முன்னோடியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு
## விலையில் மாற்றம்

கொழும்பில் நிலவுகின்ற மண்ணெண்ணெய்க் கொள்வனவுகள் கட்டுப்பாடுகள் காரணமாகவும், போக்குவரத்து சீரின்மையாலும் நடைமுறையில் உள்ள மண்ணெண்ணெயின் கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது. இதன்படி மொத்த விலை ஒரு லீற்றர் 38 ரூபாவாகவும், சில்லறை விலை ஒரு லீற்றர் 40 ரூபா வாகவும் இருக்கும்.

## வற்றாப்பளை அம்மன் கோயில்
## பூசைகள் நடைபெறவில்லை

முல்லைத்தீவுப் பகுதிகளில் பிரசித்தி பெற்ற கோயில்களில் ஒன்றான வற்றாப்பளை அம்மன் ஆலயம் எவ்வித பூசையுமின்றி காட்சியளிக்கின்றது.

கடல்பகுதியை அண்டிய இக்கோயில் கடந்த ஜூன் மாதம் முதல் இடம் பெற்ற வான், ஷெல் தாக்குதலினால் பாதிப்படைந்துள்ளது குறிப்பிடத்தக்கது, ப-11

போலி...

இவற்றில் துர்நாற்றம் வீசுவதாகவும், இதன் தேநீரைப் பருகியவர்கள் சிலர் வயிற்றோட்டம், வாந்தியால் பீடிக்கப்பட்டதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களும்...

மிய தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு மகஜர் மூலம் புகார் செய்துள்ளது.

பொலிஸ் காவலில் இருக்கும்பொழுது மரணமடைவது இப்போது வழமையாகி விட்டது. இதனால் தொழிலாளர் அச்சத்துடன் வாழுகிறார்கள் என்றும் அம் மகஜரில் கூறப்பட்டுள்ளது. (33)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 18 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.